[1982 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த ஆப்பரேஷன் தியேட்டர் கட்டி முடிக்கப்பட்டவுடனேயே பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண முடியும். அதுமட்டு மல்ல அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே, குழந்தைகள் பிரி விலே 105 படுக்கைகள் இருக்கின்றன என்றும் சொல்லி இருக் கிறேன். குழந்தைகள் பிரிவினையைப் பொறுத்த வரையிலே கேஸ்ட்ரோ என்டரைட்டீஸ் என்ற அந்த வாந்தி பேதி நோயினால் பாதிக்கப்படுபவர்கள்தான் அங்கே அந்த எண்ணிக்கையிலே பாதிப் பேராக இருக்கிறார்கள். ஆகவே, இதற்காக மேஸிவ் ஓரல் ஹைட்ரேஷன் என்ற ஒரு கேம்ப்பெயின் ஆரம்பித்திருக்கிறோம். அதன்மூலம் அந்த நோயாளிகள் மருத்துவமனையிலே அனுமதிக் கப்படாமலேயே அவுட் பேஷன்ட்டாக இருந்து சிகிச்சை பெறு வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனை ஒரு பெரிய ஸ்கீமாகக் கொண்டுவந்து இருக்கிறோம். இதிலே வெற்றி கண்டு விட்டால் அங்கே குழந்தைகளின் படுக்கைகளை உயர்த்த வேண் டிய தேவையில்லாமல் சமாளிக்க முடியும் என்று கருதுகிறோம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, 500 படுக்கை களை அமைச்சர் அவர்களால் தர முடியாவிட்டாலும் அமைச்ச ரவர்கள் பதிலிலே குறிப்பிட்ட அளவினைப் போல இரண்டு மடங்கு படுக்கைகளையாவது தருவதற்கு அமைச்சரவர்கள் முயற் சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த மருத்துவமனையிலே ஜெனரேட்டர் வசதி இல்லாத காரணத்தால் பல்வேறு தொல்லைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த இரண்டு கோரிக்கை களையும் அமைச்சரவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஜெனரேட்டரைப் பொறுத்தவரையிலும் அந்தப் பிரச்சினை இப் போது தீர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால், படுக்கைகளின் எண் ணிக்கையை உயர்த்துவதைப் பொறுத்தவரையிலே நான் மாண்பு மிகு திரு. ரமணி அவர்களுக்கு அளித்த பதிலே இதற்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவேகானந்தர் நினைவுப்பாறைக்குச் செல்ல உபயோகிக்கப்படும் இயந்திரப் படகு.

*வினா எண் 434—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய சுற்றுலாத்துறை இயந்திரப்படகை விவேகா னந்தர் நினைவுப்பாறைக்கு உபயோகப்படுத்த கொடுத்துள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) எப்பொழுது முதல் பயன்படுத்தப்படும் ?

1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. சு, முத்துசாமி (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 4·50 இலட்சம் மதிப்புள்ள 100 இருக்கைகள் கொண்ட ''பாகீரதி'' என்ற மோட்டார் படகு 1974 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

(இ) விவேகானந்தர் கேந்திரத்தினரால் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் தேதி வரை உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் படகுப் போக்குவரத்தினை அரசு ஏற்றுக்கொண்ட பிறகு, பழுதடைந்த நிலையிலிருந்த இப்படகு தூத்துக்குடி துறைமுகத்தில் பழுது பார்க்கப்பட்டு, கடந்த டிசம்பர் (1981) முதல் மீண்டும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே படகு விடுவதிலே தகராறுகள் எல்லாம் இருந்தனவே அவை தீர்க்கப்பட்டுவிட்டனவா ? இப்போது தகராறு இல்லாமல் பொதுமக்களின் உபயோகத்திற்கு அது பயன்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அதனை அரசு ஏற்றுக் கொண்ட பின்பு இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பொது மக்களுக்கு உபயோகப்படுகின்ற வகையிலே சிறப்பான முறையிலே இயங்கிக் கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பிலே இப்படி தொடர்ந்து படகு விடுவதற்குப் பதிலாக விவேகானந்தர் பாறைக்கு கடலிலே ஒரு பாலம் அமைத்து அதன் மூலம் பாதை அமைப்பது என்ற ஆலோசனை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி நிலத் தொடர்பு ஏற்படுமானால் விவேகானந்தர் பாறைக்கு இருக்கின்ற ஒரு சிறப்பு அதனால் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படாதா? அது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் முதலிலே யோசித்தது, அங்கே கார்கள்கூட போய்வருவதற்கான ரோடு வசதி ஏற்படுத்தவேண்டும் என்பது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பேராசிரியர் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் நடந்துபோகிற அளவிற்கு ரோடு ஏற்படுத்தினால் போதும் என்று தற்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இருந்தாலும் இப்போது அவர்கள் மீண்டும் சொல்லியதையும் வைத்து மறுபடியும் பரிசீலனை செய்து, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதாக இருந்தால், அதிலே வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்த அரசு தயங்காது.